DUPLICATE

புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்

விரோதிஞு (1889)
ஆவணி மீ உஉ உ
ஆரம்பமானது.

பத்திரிக் கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)
யாழ்ப்பாணப்பட்டினம் ஒரு வருஷத்துக்கு ரூ. உ-உ௫
வெளியூர், இந்தியா: ,, ரூ. ௩-௭௫
தொலைப்பகுதி: ,, ரூ. ௩-௭௫
தனிப்பிரதி சதம் -0௫.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.

		ரூ. ச.
முதன்முறைக்கு:—	ஒருகலம்	௭-௫0.
,,	அரைக்கலம்	௪-00.
,,	கால்கலம்	௨-௫0.
,,	ஒரு அங்குலம்	-௫0.

அடுத்தமுறைகட்கு இவ்விகிதங்களின் அரைவாசி

புத்தகம் - ௩௨ } யாழ்ப்பாணம்—ரௌத்திரிஞு வைகாசிமீ ௧௪உ; ௧௯௨0-ம்ஆ மேமீ உ௭உ. { இலக்கம் — ௪௫.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருணை[illegible]ர்க்கி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பாம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
போர்பூத்த சிவன்வந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானருள் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலெனமூன்று
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரிக்கலானேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாசித், கஸ்தூரி, குமிஸ்தகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்பிரகபஸ்பம், லோகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதக்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துக்குள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, குன்மவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும்பெறுவார்கள்; பலன் கீர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைஇறாத்தலுக்கு ரூபா ௧0. கால் இறாத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொலைவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணிஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை;
1 இல. 96 முதல் மருதானை, கொழும்பு.

ஜவுளிவிளம்பரம்.

M. R. PERUMALIER,
MANUFACTURER OF SWADESI CLOTHS,
West Tower Street, Madura,
(S. INDIA.)

எமது தொழிற் சாலையில் தற்கால நாகரீகத்திற்கு ஏற்ற விதமாக அநேக நூதன இனுசுகள் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகையிலும், சாதாவிலும், வேஷ்டிகள், சால்வைகள், சவுக்கங்களும், இன்னும் பலவித இங்கிலீஸ் கலர்களில், ஜரிகைச் சேலை, சாதா சேலை, தாவணி மதுரை சுன்னடி புடவை, சித்தாடை, ரவிக்கை வகையராக்கள், ஜரிகையிலும், சாதாவிலும் தயார் செய்தவைத்தும், காசி (பெனாரிஸ்), பம்பாய், புனா, சூரத், கல்கத்தா, காஷ்மீர், காக்கிநாடா, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னைபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, நெல்லூர், உப்பாடை, துயிலி, மலையாளம் முதலிய இடங்களில் தயாராகும் பட்டுச் சேலை, பளுக்குச் சேலை வகையரா சகலதினுசுகளும் மொத்தத்தில் வாங்கவும் வாங்கி உடனுக்குடன் விற்பனையாகும் வியாபாரிகளுக்கும் மற்றும் சொந்தப் பாவிப்புக் காரர்களுக்கும் மொத்தமாகவும் இல்லறையிலும் சகாய விலைக்கு நேரில் கொடுத்தும் தபால் மூலமாய் வரும் ஆடர்களுக்கு போஸ்டு பார்சலாக சரக்கு அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

(1) இருப்தி யில்லாத சரக்குகளை திரும்பப் பெற்றுக்கொண்டு வேறுகோரும் சரக்கை மாற்றிக் கொடுக்க முடியும்.

(2) சகல ஆடருக்கும் வி. பி. மூலமாக சரக்கு அனுப்பப்படும்.

(3) சிங்கப்பூர் பினாங்கு மலாக்கா முதலிய (S S) ஸ்ட்ரெயிட் செத்டில் மெண்டு நாடுகளுக்கும் வி. பி. யிலும் அனுப்பக்கூடும்.

(4) கோலாலம்பூர் கிலாங்கூர் முதலிய (F M S) பெடரேட்டெட் மலாய் நாடுகளுக்கும் தென் ஆபிரிக்கா மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கும் வி. பி. சட்டம் இல்லாததினால் போஸ்டல் ஆர்டர் மூலமாகவாவது மணியார்டர் மூலமாகவாவது பணம் அனுப்பவேண்டும். பணம் வந்த பிறகு சரக்கு அனுப்பப்படும்.

(5) முற்பணம் அனுப்ப சவுகரியப்படாதவர்கள் சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய (S S) ஐச் சேர்ந்த போஸ்மாஸ்டர்கள் பேருக்கு பார்சல்களை அனுப்பும்படி எழுதினால் அனுப்புவோம். அவ்விடம் வந்து பணங்கட்டி பார்சல்களைப் பெற்றுக் கொள்ளலாம். இது மிகவும் சவுகரியமான ஏற்பாடு. அல்லது பாங்க் (Bank) மூலமாய் சரக்கு அனுப்பும்படி எழுதினாலும் அனுப்புவோம். ஆனால் பணந்தந்து கட்டி பார்சல்களைப் பெற்றுக் கொள்ளாத பக்ஷத்தில் சகலசெலவும் அவர்களைப் பொறுத்ததாகும்.

N. P. (a) ஜவுளி விலை விபரமடங்கிய காட்லாக் வேண்டுவோர் எமக்கு எழுதி இனாமாக பெற்றுக்கொள்ளலாம்.

(b) எல்லா ஆடர்களும் எம்முடைய சேர்பார்வையின் பேரில் அனுப்புவோம்.

தங்கள் ஆர்டரை எதிர் பார்க்கும்
மு. ரா. பெருமாள் ஐயர்,
சுதேச ஜவுளி வியாபாரம்,
மேலைக் கோபுரவீதி,
2 மதுரை. (இந்தியா).

சித்திரப் படங்களுடன் கூடிய

மானிட ஜீவிய சிந்தாமணி

இப்புத்தகம் அமெரிக்காக் கண்டத்திலுள்ள அநேக அரிய பெரிய சாஸ்திரங்களையும் நமது பூர்வீக கிரந்தங்களையும் ஆராய்ச்சிசெய்து எழுதப்பெற்றுள்ளது. இதில் தேகத்திலுள்ள எலும்பு, சதை, நாடி, நரம்பு முதலியவைகளைப்பற்றியும், தேகத்திலுள்ள ஈரல், இரைப்பை, சுவாசப்பை, சிறு குடல், பெருங் குடல் மூளை முதலிய சரீர அமைப்பைச் சித்திரப்படங்களுடன் எடுத்துக்காட்டியும், தேகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் செய்யும் வேலை முறைப்பாடும், அப்படிச் செய்யத் தவறின் அதற்குக் காரணமும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் ஒவ்வொரு ரோகங்களும் எக்காரணங்களிலிருந்து எவ்வெவ் விதமாய் உண்டாகின்றன வென்பதையும், அந்நோய்களுக்குப் பரிகாரமான இந்து, யூனானி, இங்கிலீஷ் முதலிய ஔஷதபாகங்களும், மருத்துவ சாஸ்திரம், சுகாதாரம், சிசுபரிபாலனம், பால்ய விவாகம், ஆண் பெண் சிசுஉற்பத்தி விபரம், ஆண் மலடு, பெண் மலடு முதலிய விபரங்களும், பாம்பு, தேள், நட்டுவக்காலி, வண்டுகடி முதலிய விஷக்கடிகளும் அவற்றிற்கான ஔஷத விபரங்களும், இன்னும் இவ்விடத்தில் சொல்லமுடியாத அநேக இரகஸ்யமான விஷயங்களும் அடங்கியது. இப்புத்தகம் கைக்கொண்டவர்கள் புருஷர்கள் வைத்தியரைத் தேடவேண்டியதில்லை. இதன் விலை ரூபா 2; பெதர்வெயிட் பேப்பர் பதிப்பு கலிகோபைண்டு விலை ரூபா 3. தபால்சார்ஜ் அணா 3. தொலைவாய்ப் பகுதிகளுக்கு தபால்செலவு அணா 6.

பிலேக், கலரா, மலேரியா முதலிய தொற்று நோய்களின் உற்பத்தியையும் அவற்றிற்கான பரிகாரங்களும் விலை அணா 6.

F. M. S. மலாய்நாட்டி லுள்ளவர்கள் முற்பணம் அனுப்பவேண்டும்.

டாக்டர், எஸ். சந்திரசேகர்,
கும்பகோணம்
3 இந்தியா.

ஜவுளி விளம்பரம்.

சுதேச ஜவுளிகள் விலைசகாயமாய்க் கிடைக்குமிடம் எது?

மதுரை எம். ஆர். வெங்கடாசலநாயுடு அன்டு சன்ஸ்

ஜவுளி கம்பெனியில் வாங்கலாம்.

நமது கம்பெனியில் தற்கால நாகரீகத்துக்குத் தக்கவாறு உள்ளூரில் புதுமாதிரியாகத் தயாராகும் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகை வேஷ்டி ஜோடிகள், சால்வைகள், சவுக்கங்கள், பலவித இங்கிலீஷ் கலரில் ஜரிகைச் சேலைகள், சாதா போர்டர் சுன்னடிச்சேலைகள் வகையராக்களும், சித்தாடை ரவிக்கைத்துணிகளும், காசி, பம்பாய், கல்கத்தா, புனா, சூரத், காஷ்மீர், காக்கிநாடு, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, நெல்லூர், உப்பாடை, துயிலி, மலையாளம் முதலிய இடங்களிலிருந்து ஜவுளிகள் வரவழைக்கப்பட்டு [illegible] வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு வியாபாரிகளுக்கும், சொந்தப் பாவிப்புக்காரர்களுக்கும், தேவையான தினிசுகளை விரும்பிக் கேட்கும்வண்ணம் நேரில் வருபவர்களுக்கும், பிறதேசவாசிகள் வி. பி. போஸ்ட் மூலமாக அனுப்பும்படி எழுதுவோர்களுக்கும் அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

தவிரவும், எங்கள் கம்பெனியின் பட்டுநாணயத்திற்கும், ஜரிகைக்கும் உத்தரவாதமா யிருப்பதால், பிறதேசவாசிகள் சம்பிளையின்றி ஏராளமான ஜவுளிகளுக்கு ஆடர்கொடுத்து வருகிறார்கள். ஒருமுறை உண்மையைச் சோதிப்பதற்காக எங்கள் விலைவிபர ஜாப்தா (Catalogue) வரவழைத்துச் சிறு ஆடர் கொடுத்து ஜவுளிகளின் சகாயத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

N. B. சிங்கப்பூர், பினாங்கு என்னுமிடங்களுக்கும் வி. பி. மூலமாகவும், மற்றும் வி. பி. சட்டமில்லாத F. M. S. என்னும் பெடரேட் மலாய், தென் ஆபிரிக்கா முதலிய தொலைவாய் இராச்சியப்பகுதிகளுக்கு ஆடருடன் முற்பணம் அல்லது போஸ்டல் ஆடர் அனுப்பவேண்டும். அல்லது பாங்கு மூலமாக அனுப்பவுங்கூடும்.

தமது ஆடரை எதிர்பார்க்கும்

எம். ஆர். வெங்கடாசலநாயுடு அன்டு சன்ஸ்.,
நாகரீக ஜவுளி கம்பெனி,
மேலைக்கோபுரவாசல்,
மதுரை.

M. R. V. NAIDU & Sons,
High Class Cloth Bazaar,
4 West Tower, Madura.

கவனியுங்கள்.

நயம் தினுசுகள்-சொற்பலாபம்-விலை சகாயம்.

பேர்பெற்ற கெட்டிச்சாய நூல்கம்பேனி எது?

மதுரை

மு. சு. ராமசாமிஐயர் கம்பேனியே.

ஐயா!

எங்கள் பேரில் பட்சமும் விசுவாசமுமுள்ள கனவான்களே, நமது கம்பேனியில் சொந்தப் பார்வையில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் அலிஜரைன் என்ற பீபாசாயத்தில் உற்பத்தியாகிறாட்டுச்சிகப்பு, கெட்டிச்சாயநூல்களில் 10-ம் நம்பர் 16-ம் நம்பர் 20-ம் நம்பர் 22-ம் நம்பர் 24-ம் நம்பர் வரை. 1-ந் தரம் 2-ந் தரம் சாயங்களில் சுடர் அதாவது சுயவர்ணம் கால் கப்பு அரைக் கப்பு முழுக் கப்பு நிறங்களில் சாயந்தீர்ந்து 10 இருத்தல் கட்டுகளும் டை கட்டு 18 அல்லது 24 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும். 26-ம் நம்பர் முதல் 40-ம் நம்பர் வரை சிகப்பு நூல் வேண்டியவர்களுக்கு ஆடரின் பேரில் தயார் செய்து அனுப்பப்படும்.

சிவை பென்னிகறுப்பு மாதிரி செட்டி கறுப்பு சாயத்தில் 10-ம் நம்பர் முதல் 16×20×22××2430×40,ம் நம்பர்வரை சாயம் தயார் செய்து 5 ருத்தல் கட்டுகளும் டை கட்டு 20 அல்லது 30 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும்.

டை நூல்களின் விலை சகாயமாயும் இழைப்புக்கு சிதறில்லாமலும் நயமான நூல்கள் தயாராகின்றன. தேவையுள்ளவர்கள் 100-க்கு ரூபாய் 10—0—0 பத்து வீதம் அட்வான்சு அனுப்பி வி. பி. மூலமாய் ஆடர்செய்துகொள்ள வேண்டியது. டை பேல்களுக்கு பாக்கிங் செலவும் ரயில் சார்சும் பிரத்தியேகம். கம்பேனியாருக்கு பாத்தியமில்லை.

F. M. S. பெடரேரெட் மலாய நாடுகளில் இருப்பவர்கள் முன்பணம் அனுப்பி ஆடர்செய்ய வேண்டியது, சிங்கப்பூர் பினாங்கு என்ற இடங்களுக்கு வி. பி. போஸ்டு மூலமாய் அனுப்புவோம்.

நூல்விலை விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

எங்களுக்கு எழுதப்படும் ஒவ்வொரு லெட்டர்களிலும் தங்கள் விலாசம் தெளிவாகத் தெரியும்படி ஜில்லா தாலூகா போஸ்டு கிராமம் சமீப ரயில்வேஸ்டேஷன் கண்டெழுதியனுப்ப வேண்டியது. முக்கியமாய் தமிழில் லெட்டர்கள் எழுதியனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,
M. S. Ramaswamy Iyer,
Yarn Merchants,
Singara Topu Street,
5 Madura, S. INDIA.

ஔஷத விளம்பரம்.

மகாஜனங்களே!

அடியிற் குறித்திருக்கும் நோய்களுக்கென்றே முறையாய் முடித்த ஔஷதங்கள் வேண்டியவர்கள் பின்வரும் விலாசத்துக்கு எழுதி தபால் மார்க்கமாய் செலவுகட்டி அழைப்பித்து நோயில்லா வாழ்வைப்பெறும்படி வேண்டுகிறேன்.

அவையாவன;—(1) நீரிழிவு, நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு, நீர்ச்சிறுப்பு, என்னும் பிரமியரோகங்களுக்கும், மேகப்பகுதிகளுக்கும் (2) குன்மநோய்களுக்கும், (3) கோழை, காசம், இருமல முதலியவைகளுக்கும், (4) வாதப்பகுதிகளுக்கும், (5) தொய்வு, ஈளை, மந்தாரகாசம் முதலியவைகளுக்கும், (6) சுபாலர்குத்து, கணைகுத்து முதலியவைகளுக்கும், (7) குதசுவாய்வுத் தொந்தரைகளுக்கும், (8) உஷ்ணநோய்களுக்கும், (9) கட்டிகைகள், (10) பாண்டுப்பருப்புகள், (11) பித்தரோகங்கள், (12) தேகுத சிறவங்களுக்குமாகியவைகளே.

நோயில்லா வாழ்வைக்கூடிய சீக்கிரத்தில் தரக்கூடிய தகுதாதஔஷதங்கள் தயாராயிருக்கின்றன.

அவையாவன:—(1) குதசெந்தூரம், (2) ஐயகுலாதகசெந்தூரம், (3) ஆயகாந்தசெந்தூரம், (4) மிருதகசஞ்சீவிமாத்திரை, (5) கஸ்தூரிமிருதகியாதி, (6) கோரோசனைமிருத்தியாதி, (7) சந்திரோதயமாத்திரை, (8) மேகசஞ்சீவிகளுழுப்பு, (9) தாதுபுஷ்டிலேகியம், (10) மிருகசஞ்சீவிஎண்ணெய், (11) நயனசகஜனி, (12) சுபாலசந்தனதி, (13) சாலரோசமோசரணடைத்தயிலம், (14) மெழுகெண்ணெய், (15) தானக்காயெண்ணெய், (16) புளியெண்ணெய்வகைகள், (17) திருதசஞ்சீவிதயிலர்,——மருந்துகளுக்கு வேண்டிய சரக்குகளும், வீ, பீ, மூலமாயனுப்பி வைக்கதயாராயிருக்கின்றன.

சி. ஆறுமுகம்பிள்ளை,
திருஞானபண்டிதசுகாதாரவைத்தியசாலை,
6 சின்னக்கடைத்தெரு திருக்கோணமலை.

விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான சிறம் பட்டுக்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலர், மகரதோரணம், காலடிச்சலாத்து முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காரர்களால் செய்யப்பட்டு எமது கடையில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்க விருக்கின்றன. இன்னும் அவர் அவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரித்தயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

மு நாகலிங்கம்பிள்ளை,
பறங்கித் தெரு,
7 யாழ்ப்பாணம்.

விஞ்ஞாபனம்.

59

புண்ணியசீலர்காள்!

சுன்னாகந் தெற்கில் சிவபூதராசப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயம் மிகப்புராதனமாய், மண்ணாற் கட்டப்பட்டுக் இலமடைந்திருப்பதைக் கண்டு, அதனைக் கல்லால் திருப்பணிசெய்வித்துப் புதுக்க நினைந்துச் சில வருடங்கட்கு முன் (காலஞ்சென்ற) எனது தந்தையார் ஸ்ரீ கா. அருணாசலமவர்களும் மேற்படி ஆலயத்துப் பூசகராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீமத். சபாபதிக்குருக்களவர்களும் குறித்த ஆலயத்திருப்பணியை நிறைவேற்றுதற்குப் பொருள் சேர்க்கும்படி ஸ்ரீ சுப்பிரமணியர் முருகேசு என்பவரை நியமித்தனர். அம்முருகேசு என்பவர் பொருள் சேர்த்து அத்திருப்பணியிற் பெரும்பாகத்தை முடித்துள்ளனர். இவ்வாலயத் திருப்பணியை முற்றாக நிறைவேற்றுதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்யும் வண்ணம் ஆலோசிப்பதன்பொருட்டு நிகழும் ரௌத்திரி௵ வைகாசி௴ சகூ௳ செவ்வாய்க்கிழமை இரவு எழுமணியளவில் மேற்படி ஆலயத்திலேயே ஒருசபை கூட்ட நிச்சயித்திருப்பதால் தங்களையும் அச்சமையம் சமுகஞ்செய்து ஊக்கப் படுத்திவிடுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
தங்களன்பன்,
கா. அ. தியாகராசா.

ரௌத்திரி௵,
வைகாசி௴ சஉ௳.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்ற அடைவுபிடிக்கும் சுன்னாகம், நாகநாதபிள்ளை பொன்னம்பலமிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போ தவணை தப்பிவிட்ட சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டியனவாகிய நகைகளின் விபரம்.

இல. 32, 22-1-19, உரும்பராய், சுப்பர் வைத்திலிங்கம், பூரான்சரடு 1 பாரசரம் சோ 1 ரூபா 80.

இல. 34, 23-1-19, மல்லாகம், கதிரவேலு வல்லிபுரம், தட்டைக்காப்பு சோடி 1 ரூபா 80,

விற்பனவு:—ரௌத்திரி௵ வைகாசி௴ 23௳ (1920 ம் ஆ ஜூன்௴ 5௳) சனிக்கிழமை பகல் 10 மணி தொடக்கம் மேற்படி சுன்னாகம் சந்தைக்கிட்டங்கியில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

நா. கனகராயபிள்ளை உடையார்,
லைசென்ஸ்மேஸ்தர்.
63 உடுவில்

அறிவித்தல்.

திரிகோணமலை சுகாதாரசங்கத்தாரின் பொறுப்பிலிருக்கும் பட்டணரோட்டுகளுக்குத்தேவையான 410 கியூப் கிறேவலும், 64 கியூப் சருகைக்கல்லும் கொடுப்பதற்கான முத்திரை வைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் 1920-ம் ஆண்டு ஆனி௴ 12௳ சனிக்கிழமை மத்தியானம் 12 மணிவரைக்கும் திரிகோணமலை சுகாதாரசங்கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறைந்த அல்லது எந்தக் கேள்வியையும் ஏற்பதற்குச் சுகாதாரசங்கத்தலைவர் கடமைப்பட்டவரல்லர்.

வேறுமறியவேண்டிய விளம்பரங்களை இந்தக் கந்தோரில் விசாரிடம் கேட்டறிந்துகொள்ளலாம்.

(61) W. G. Vallipuram,
சங்கத்தலைவர்.

சுகாதாரசங்க கந்தோர்,
திரிகோணமலை, 21௳ வைகாசி௴ 1920-ம் ஆ.

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: ரௌத்திரி௵ வைகாசி௴ சஉ௳

கமச்செய்கை விருத்தி.

கமச்செய்கை விருத்தியில் அரசாட்சியாரும் ஊரவர்களும் இப்போது அதிக ஊக்கமெடுத்திருக்கிறார்கள். நச்சடுவாவென்னுமிடத்திலே சனங்கள்குடியேறிப் பயிர்ச் செய்கை நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் இப்போது நமது அரசாட்சியாரால் செய்யப்படுகின்றன. அரசாட்சியார் தாமாகப் பயிர்ச்செய்கை நடத்துவதுடன் ஊரவர்களுக்குச் சுலபமான நிபந்தனைகளுடன் கொடுத்து அவைகள் விரைவில் நல்ல விளைநிலங்களாவதற்கேற்ற ஒழுங்குகளும் செய்துவருகிறார்கள். மின்னேரிக் குளத்துக் கணித்தாய் ஓர் கம்பனியாருக்கு ௯010 ஏக்கர் நிலத்தைக் குத்தகையிற் கொடுத்திருக்கிறார்கள். இலங்கை "மில்"கம்பனியார் காளாவிசிலே ௫000 ஏக்கர் நிலம் அரசாட்சியாரிடமிருந்து வாங்கியிருக்கிறார்கள். கீழ் நாட்டுப் பயிர்ச் செய்கைச் சங்கத்தார் கிறிண்டி ஒயாவிலே ௨,௯00 ஏக்கர் நிலம் அரசாட்சியாரிடமிருந்து வாங்கியிருக்கிறார்கள். மெஸ் டபிள்யு. ஏ. டி. சில்வா என்பவர் கச்சுவோவிலே ௧000 ஏக்கர் நிலம் வாங்கியிருக்கின்றார். இவையன்றி அநேகர் பலவிடங்களில் சிறுச்சிறுத் துண்டு நிலங்களாக அதாவது தலைக்குப் பத்து ஏக்கர் அல்லது ஐந்து ஆறு ஏக்கர் விதமாக அநேக நிலங்களை வாங்கியிருக்கிறார்கள். பூநகரிப்பக்கத்தில் மாத்திரம் எத்தனையோ யாழ்ப்பாணத்தவர் சிறுச்சிறுத் துண்டு நிலங்களாக அநேக நிலங்களை வாங்கி இப்போது காடுவெட்டி உழுது பண்படுத்துகிறார்கள்.

மின்னேரி உணவுப்பொருள் விருத்திக் கம்பனியாருக்குக்கொடுக்கப்பட்ட ௯000 ஏக்கர் நிலத்தை அக்கம்பனியார் யாதுங் குத்தகையின்றிப் பத்து வருஷத்துக்குச் செய்கைபண்ணிய பின் வருஷம் ஏக்கர் ஒன்றுக்கு ரூபா ௯ விதம் அவர்களிடமிருந்துகுத்தகைப்பணம் அறவிடப்படும். இவர்களிடமிருந்து ஐந்து வருஷத்துக்கு நீர்வரி அறவிடப்படமாட்டாது. தங்கள் நிலத்திலுள்ள மரங்களைத் தங்கள் பாவிப்புக்கு அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். நெற்செய்கை நடத்துவதற்குப் பள்ள நிலங்களை அரசாட்சியார் கொடுத்திருப்பதுமன்றிக் கூலியாட்கள் வசிப்பதற்கு மலையோரத்தில் மேட்டுநிலங்களை நூறுபேருக்கு ௫0 ஏக்கர் நில விதமாகவும் கொடுத்திருக்கிறார்கள். வன்னிநாடுகளில் சனங்கள் குடியேறிப் பயிர்ச் செய்கை நடத்துவதற்குப் பெரும் தடையாயிருப்பது காட்டுச்சுரமே (Malaria) யாகும். இத்தடையை நீக்கிவிடுவதற்கு கூலிகள் வசிக்கும் மேட்டுநிலத்தில் அரசாட்சியார் வைத்தியசாலைகளைக் கட்டுவார்கள். இந்த மின்னேரிக் கமச்செய்கைக் கம்பனியாருக்கு நிலம் என்ன நிபந்தனைகளுடன் கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அந்த நிபந்தனைகளுடனேயே மற்றைய கமச்செய்கை விருத்திக் கம்பனிகளுக்கும் நிலங்கள் கொடுக்கப்படும். சிறுசிறுத் துண்டு நிலங்களாக வாங்கிக் கமச்செய்கை நடத்த விரும்புவோர்க்கு இதினும் சுலபமான நிபந்தனைகளுடன் அரசாட்சியார் நிலங்கொடுக்க அதிக பிரியமுள்ளவர்களாகவிருக்கின்றனர்.

அரசாட்சியார் இலங்கைக்கு வேண்டிய உணவுப்பொருட்களை இலங்கையிலேயே விளைவித்துக்கொள்வதற்கு ஓர் கட்டளைச் சட்டத்தையும் ஏற்படுத்துங் கருத்துடையவர்களாயிருக்கின்றனர். இச்சட்டத்தின்படி முப்பதுஏக்கருக்குமேல் பயிர்ச்செய்கை நடத்துவோர் அல்லது பத்துக் கூலி ஆட்களுக்குமேல் வைத்து வேலை செய்விப்போர் தாம் பயிர்செய்யும் நிலத்தில் நூற்றுக்கு இரண்டுவீதத்திற்குமேற்பட்ட தரையில் ஏதுமோர் உணவுப்பொருளைச் செய்கைபண்ணவேண்டும்.

(உ) இங்ஙனமவர்கள் பயிர் செய்யும் நிலம் முன் பயிர் செய்யப்படாத புதுநிலமாயிருக்கவேண்டும்.

(௩) தென்னை தேயிலை றப்பர் தோட்டங்கள் வைத்து நடத்துவோர் தங்கள் தோட்டங்களுக்கணித்தாய்ப் புதுநிலங்களை வாங்கி உணவுப்பொருட்களை விளைவிக்க இயலாதிருந்தால் தங்கள் தோட்டங்களிலேயே தென்னை தேயிலை றப்பர்ச் சிறுபயிர்களுக்கிடையில் உணவுக்குரிய சிலபயிர்களையும் செய்கைபண்ணவேண்டும்.

(௪) நூறு அல்லது அதற்குமேற்பட்ட கூலி ஆட்களை வேலைகொள்ளும் தனித்தனி ஆட்கள் அல்லது கம்பனிக்காரர் தாங்கள் வேலைகொள்ளும்கூலி ஆட்களின் தொகையின் நூற்றுக்குப் பத்துவீதத்துக்குச் சரியான ஏக்கர் நிலத்தில் உணவுப் பொருட்களைச் செய்கைபண்ணவேவேண்டும்.

(௫) மேற்படிஒழுங்குகளுக்கு அமையவேண்டியவர்கள் தாமாகப் பயிர்ச்செய்கையை நடத்திவர இயலாதிருந்தால் வேறு பேரோடு சேர்ந்து நடத்தலாம். அல்லது புதியநிலங்களில் பயிர்ச்செய்கை நடத்தும் கம்பனிகளில் பணமிட்டு அப்பயிர்ச்செய்கைக்கு உதவிசெய்யலாம்.

பட்டாலறிவன் சண்டாளன், என்றபடி நமது அரசாட்சியாருக்கும் நமக்கும் இப்போதுதான் நற்புத்தியுண்டாகியிருக்கின்றது. நாம் நமது உணவுப்பொருட்களுக்குப் பெரும்பாலும் இந்தியாவிலேயே தங்கியிருந்தோம். சென்ற இருவருடங்களாக இந்தியாவிலிருந்து இங்கு அரிசி நெல்லு வரவு குறைந்ததாலும், இந்திய அரசாட்சியார் வெந்தவீட்டிற் பிடுங்கியவன் சிலமாய்த் தங்கள் லாபமொன்றையே பெரிதாகக் கவனித்து அவற்றின் விலையை மிகவுமேற்றியதாலும் நாம்படும்பாடு அந்தோ! சொல்லுந்தரத்ததன்று எத்தனையோ சனங்கள் வயிறார உண்ண வழியின்றி வாடி வதங்குகின்றார்கள். எந்தக் காலத்திலாவது இலங்கைக்கு இவ்வித கஷ்டம் நேர்ந்ததில்லை. "நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்ல வல்லக் கொல்ல வல்லப் பொல்லாக் குணம்போக்க" என்றபடி நமது தேசத்திலே நமது தேசத்துக்கு வேண்டிய உணவுப் பொருட்களை விளைவித்துக்கொள்வதற்கு வேண்டிய நிலமிருக்க அதனைச் செய்கை பண்ணாது சோம்பேறித் தனத்திலாழ்ந்திருந்த நம்மை விழிப்புறச்செய்யுநோக்கமாகவே ஈஸ்வரன் இப்பஞ்சமுண்டாகும்படி செய்திருக்கின்றானெனலாம்.

நீதிபோதம். உசு.

சோமேசர் முதுமொழி வெண்பா.

புலான்மறுத்தல்.

மச்சஞ் சுமந்துப்ப வானோர்ப் பணிகொண்டான், துச்சனுஞ் சூரபன்மன் சோமேசா—நிச்சயமே, தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பா, னெங்ஙன மாளு மருள்.

ப-ரை: துச்சனும் சூரபன்மன்-துஷ்டனாகிய சூரபன்மனென்னும் அசுரன், மச்சஞ் சுமந்து உய்ப்ப-மீனைச் சுமந்துகொண்டுபோய்த் தன்னிடம் கொடுக்கும்படி, வானோர்ப் பணி கொண்டான்-தேவர்களை ஏவல்கொண்டான்; சோமேச-சோமேசரே, நிச்சயமே-நிச்சயமாக, தன் ஊன் பெருக்கற்கு-தன்னுடைய உடம்பைவளர்த்தற்கு, தான்-(ஒருவன்) தான், பிறிது ஊன் உண்பான்-மற்றொன்றின் ஊனைத் தின்பவன், எங்ஙனம் அருள் ஆளும்-எவ்வாறு அருளை ஆளுவான் எ-று.

க-ரை: சூரபன்மன் தான் ஊனுண்ணும் பொருட்டுத் தேவர்களைக்கொண்டு மச்சஞ் சுமப்பித்தான்; ஊனுண்பவன் ஒருபோதும் அருளுடையவனாகமாட்டான் என்பதாம்.

வி-ரை: துச்சன் துட்டனென்பதின் போலி. எங்ஙன மாளு மருள் என்பது ஆளானென்னுங் கருத்துப்படநின்ற இகழ்ச்சிக்குறிப்பு.

கதைச் சுருக்கம்.

மாயை யென்பவள் காசிபமுனிவரைக் கூடிப் பெற்ற பிள்ளைகளாகிய சூரபன்மன், சிங்கன், தாரகன் என்னும் மூவரும் பன்னாளாகச் சிவபிரானை நோக்கி அருந்தவஞ்செய்து பெரும்வரங்களைப்பெற்றனர். அவர்களுட் சூரபன்மன் நூற்றெட்டு யுகங்கட்கு ஆயிரத்தெட்டண்டங்களை ஆளுதலாகிய வரத்தையடைந்து அரிபிரமேந்திராதி தேவர்களையெல்லாம் வென்று விண்ணுலகைத் தீக்கிரையாக்கி இந்திரன்குமாரனாகிய சயந்தனையும் மற்றும் தேவர்களையும் சிறைப்படுத்தினன். இந்திரன் தன்தேவியாகிய அயிராணியுடன் விண்ணுலகம் விட்டு மண்ணுலகடைந்து சீர்காழியில் மூங்கிலாக உருத்திரிந்துநின்று சிவபிரானை நோக்கித்தவம்புரிந்தான். சூரபன்மன் சிறைபிடிப்பட்ட தேவர்களைத் தனக்கான பற்பல பணிகள் செய்யும்படி ஆஞ்ஞாபித்தான். இவன் தமக்குச் செய்த இன்னல்களைச் சகிக்கலாற்றாராய்த் தேவர்கள் தங்கள் அரசனாகிய இந்திரனிடம் முறையிட அவன் கைலைபதிகிரியை யடைந்து சிவபிரானுக்கு விண்ணப்பஞ் செய்ய, சிவபிரான் தமது திருக்குமாராகிய சுப்பிரமணியக் கடவுளைச் சூரபன்மனுடன் யுத்தஞ்செய்யும்படி விடுக்க, அப்பெருமான் சூரபன்மன் முதலியோரனைவரையுஞ் செயித்துத் தேவர்கட்கு அப்பொழுது நேர்ந்த இன்னலை நீக்கியருளினர். இதன் விரிவைக் கந்தபுராணத்திற் காண்க.

கீழைத்தேச பாஷாசங்கம்.

(Communicated.)

கீழைத்தேசபாஷை எனினும், பிராசீன பாஷை எனினும் ஒக்கும். இப்பெயரசங்கமொன்று சென்ற 15 வருடங்களாகக் கொழும்பு நகரியில் வித்தியா பகுதியாரின் ஆதரவின்கீழ் சிங்களப் பிரபுக்கள், புத்தகுருமார் என்னும் இருபாலாரினதும் ஊக்கத்தினால் தளராது நடைபெறுகின்றது. சிங்களம், பாலி என்னும் பாஷைகளைப்படித்து அவற்றிலுள்ள இலக்கணம் இலக்கியம் சரித்திரம் என்பவற்றில் பாண்டித்தியம்பெற்று அவற்றைப் பிரகாசிக்கச் செய்விப்பதே இச்சங்கத்தின் நோக்கமாம். இச்சங்கம் நன்கு விருத்திபெற்றுக் கல்விமான்களால் நிரம்பி உன்னத ஸ்திதியை யடைந்து பிரகாசியாநின்றது. புதிதாக இலங்கையில் அமைக்கப்படவிருக்கும் சர்வகலாசாலை என்னும் உயர்தரக் கல்விகற்றற்குரிய யூனிவேசிற்றிக் கல்லூரியில் சிங்களம் பாலி என்னும் பிராசீனபாஷைகளைக் கற்பிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளையும், பாடத்திட்டங்களையும், போதகாசிரியர் நியமனம் முதலியவிஷயங்களையும் இச்சங்கத்தாருடன் சேர்ந்து யோசித்து மெஸ். டென்ஹாம் அவர்கள் தகுந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார் எனக் கொழும்புப் பத்திரிகைகள் கூறுகின்றன.

அப்படியான சங்கமொன்று தமிழருக்கிருக்கின்றதா? தமிழருடைய தமிழ்ப்பாஷை பிராசீன பாஷையல்லவா? சம்ஸ்கிருதம் அவர்களுடைய மூல பாஷையல்லவா? இப்பாஷைகளிலுள்ள பிராசீன நூல்களின் அறிவு தமிழருக்கு அவசியமல்லவா? பத்து வருஷங்களுக்குமுன் கொழும்புச் சங்கத்திற்குக் கிளைசங்கமாக யாழ்ப்பாணத்தில் ஒரு ஓரியென்டல் சங்கமென்னும் காவிய பாடசாலையொன்றை நடைபெறும்படி ஊக்கப்படுத்தினவர் மெஸ். வன் கயிலன்பேர்க். அவர் இங்கு நின்ற சென்றபின் அது அருகிப்போயிற்று. யாழ்ப்பாணத்தில் தமிழ்ப்புலவர்கள் இல்லையா! சம்ஸ்கிருத பண்டிதர்கள் இல்லையா! இருபாஷையிலும் விற்பன்னமுடையவர்கள் இல்லையா? இவை இரண்டிலுமேயன்றி ஆங்கிலத்திலும் வல்லுனரில்லையா! தமிழர் என்ன தேசாபிமானம் பாஷாபிமானம் இல்லாதவர்களா?

இப்படியெல்லாம் இருந்தும் இவ்வளவுகாலமும் பிராசீனபாஷா சங்கம் என்னும் ஒருசங்கம் நம்மவருள் ஏற்படுத்தி நமது பழைய பாஷைகளாகிய தமிழ் சம்ஸ்கிருதம் என்னும் அரிய பொக்கிஷங்களை நம்மவர்எல்லோரும் கைக்கொள்ளும்படி முயற்சித்தவர் ஒருவருமில்லையே! அந்தோ, என்ன பரிதாபம்! பண்டிதர், வித்துவான்கள், புலவர்கள் குழுமிய பேரவையைக் காண்பது மிக்க அருமையாய்விட்டது.

கற்றறிந்த தமிழ்மக்களே! இன்னமுந் தூக்கமா! "அழுதபிள்ளை பால்குடிக்கும்" என்பது பழமொழி மேற்படி சங்கமொன்றமைத்து நடத்தும்படி வித்தியாகர்த்தரை மேலும்மேலுந் தூண்டிக் கேட்கவேண்டாமா? சுன்னாகத்தில் தாபிக்கப்பட்டு நடைபெறும் பிராசீனபாடசாலையில் இப்போது நாற்பத்தைந்து பிள்ளைகள் வரையில் படிக்கிறார்களே. அவர்கள் எல்லாரையும் இப்படியொரு சங்கமிருந்தால் பரீக்ஷைபண்ணி ஆதரிக்குமே. சற்றே விழியுங்கள், முயலுங்கள்.

பத்திராபிமானிகள் கவனிக்கவேண்டியது.

இதுகாறும் யாராவது பத்திராக்கிரயத்தைத் தரும்போது அத்தொகையை, தந்தவரது பெயருடன் பத்திரிகையில் வெளியிட்டு வந்தேம். இனிமேல், அங்ஙனஞ்செய்யாது, பத்திராக்கிரயத்தைப் பெற்றவுடனே பெற்ற பணத்திற்குப் பற்றுச்சீட்டுப் பிறப்பித்துவிட நிச்சயித்திருக்கின்றேம். பிறவூர்களிலிருப்பவர் பணமனுப்பியபின், பற்றுச்சீட்டு வாராதவறினால், அதைக்குறித்துக் கூடிய சீக்கிரத்தில் எமக்குத் தெரிவித்துப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும். பத்திராபிமானிகள் பணமனுப்புங்காலங்களில் தயவுசெய்து தங்கள் பெயரையும் விலாசத்தையும் தவறாமல் எமக்கு அனுப்பிவிடல்வேண்டும். சிலர் அங்ஙனஞ்செய்யத் தவறுகின்றமையால், பணம் வரவுவைக்கும் விஷயமாகப் பலசங்கடங்கள் நேர்கின்றன.

இந்துசாதன மனேசர்.

20—5—20.

சமாச்சாரம்.

கும்பாபிஷேகம்:— புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவைப் பிள்ளையார்கோயில் கும்பாபிஷேகமானது சென்ற சித்திரை௴ 18௳ (30-4-20) வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அன்று தொடக்கம் அடுத்த பத்துநாள்வரைக்கும் அலங்கார உற்சவம் வெகு சிறப்புடன் நடைபெற்றது.

நடராஜப் பிரதிஷ்டை:—ஸ்ரீ கடையிற்சுவாமிகள் சிவாலயத்திற்குத் தென்பாகத்திலே ஸ்ரீ. ச. விநாயகமூர்த்தி செட்டியாரவர்களும், அவர் சகோதரர் ஸ்ரீ. பொன்னம்பலஞ்செட்டியாரவர்களுந் தங்கள் நிலத்தில் தங்கள் உபயமாக ஓர் அழகிய சபை அமைப்பித்து, அச்சபையின்கண்ணே, நாளையத்தினத்தில் வருஞ் சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீமத். நடராசப்பெருமானை சிவகாமியம்மை சமேதராகப் பிரதிட்டைசெய்ய நிச்சயித்திருக்கின்றனர். அடியார்கள் அச்சமயத்திற் சென்று சுவாமிதரிசனஞ்செய்தல் நன்றாம்.

சட்டநிருபண சபை:—இலங்கைச் சட்டநிருபணசபை வருகிற ஜூன்௴ 28௳ கூடும்.

யாழ்ப்பாணக் கச்சேரி:—யாழ்ப்பாணக் கச்சேரி இரண்டாம் கிளாக்காகவிருந்த மெஸ். எஸ். எஸ் அங்கப்பெரியவர்கள் மேற்படி கச்சேரி முதலாம்கிளாக்காக உயர்த்தப்பட்டிருக்கின்றனர்.

காகிதத்தின் விலை:—காகிதங்களின் விலை வரவர மிகவுமேற்றங்கொண்டுவருகின்றது. காகிதங்களின் விலை ஏறிக்கொண்டு வருதலால் சில பத்திரிகைகாரர் தங்கள் பத்திரிகைகளின் கிரயத்தை உயர்த்தியிருக்கிறார்கள்.

இராமநாதவித்தியாலயம்:—இவ் வித்தியாலய மாணவிகள் மூவர் கேம்பிரிஜ்ஜூனியர்சேட்டிபிக்கேற் பரீட்சையில் சித்தியடைந்திருக்கின்றனர். இம் மூவருள் ஒருவராகிய ஸ்ரீமதி. கண்மணியம்மாள் வண்ணார்பண்ணை பிரசித்தநொத்தாரிஸ் ஸ்ரீ. S சபாபதிப்பிள்ளையவர்களின் புத்திரி.

சைவவித்தியாபரிபாலனம்:—சைவவித்தியாசாலைகளை ஓர் சபையின் ஆதரவின்கீழ் நடத்துவதைப்பற்றியும் வேண்டிய இடங்களில் புதிய சைவவித்தியாசாலைகளை ஸ்தாபிப்பதைப்பற்றியும் ஆண் பெண் இருபாலார்க்கும் விடுதிப்போதனாபாடசாலைகளை யேற்படுத்தி நடத்துவதைப்பற்றியும் எங்கள் சமயாசாரம் சாதியாசாரங்களுக்கிணக்க தமிழ்க்கல்வியை அபிவிருத்தி செய்வதைக்குறித்தும் ஆலோசித்தற்கு இந்தமே௴ 29௳ சனிக்கிழமை பிற்பகல் 4 மணிவரையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் ஓர் கூட்டம் நடத்தப்படும்.

விவாகம்:—கொழும்புக் கச்சேரியில் ஓர் கிளாக்காக இருப்பவரும், வண்ணார்பண்ணை ஸ்ரீ. V. சட்டநாதரவர்களின் புத்திரனும், அத்துவைதகாரர் ஸ்ரீமான் நாகலிங்கமவர்களின் பௌத்திரனுமாகிய ஸ்ரீ. பொன்னுச்சாமியவர்கட்கும்; யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் ஓர் கிளார்க்காக இருக்கும் ஐயனார்கோயிலடி ஸ்ரீ. சி. சபாரத்தினமவர்களின் புத்திரி மாதுஸ்ரீ. யோகாம்பாளுக்கும் இந்த மேயீ 19௳ விவாகம் வெகுசிறப்பாய் நடைபெறது. தம்பதிகளிருவரும் சுகவாழ்வெய்தி நீடூழிகாலம் சிவபிரான் திருவருள் பாலிப்பாராக.

ஆனையிறவு உப்புச் செய்கை:—ஆனையிறவு உப்புச்செய்கை நடத்துவதற்கு வருஷம் 50,224 ரூபா வேணுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இவ்வேலையை நடத்துவதற்கு ஒரு இன்ஸ்பெக்டரும், ஒரு உதவி இன்ஸ்பெக்டரும், 6 சப் இன்ஸ்பெக்டர்மாரும் நியமிக்கப்படுவர். இன்ஸ்பெக்டருக்கு மாசம் 200 ரூபாவும், உதவி இன்ஸ்பெக்டருக்கு மாசம் 150 ரூபாவும், சப் இன்ஸ்பெக்டர்மாருக்குத் தனித்தனி 75 ரூபாவும் கொடுக்கப்படும். இவர்களையன்றி 20 காவற்காரரும், சிலசிறு உத்தியோகஸ்தரும், ஓர் ஸ்டோர்க்கீப்பரும் நியமிக்கப்படுவார்கள். 150 கூலியாட்கள் இந்தியாவிலிருந்து வந்து இப்போது இவ்வுப்புவேலை நடைபெறுமிடத்தில் வேலைசெய்துவருகிறார்கள்.

உணவுப் பொருட்களின் நிலைமை:—அரிசித் தட்டுப்பாடேற்பட்டபின் சனங்கள் தங்களுக்குப் பிரியமான கடைகளில் அரிசிகொள்ளு வாங்கிவருகிறார்கள். அரிசி முன்போலவே முடிநட்டிய கொத்தொன்று 34 சதமாகவும், அக்கியாப் நெல் பறையொன்று ரூபா 5, சதம் 10 ஆகவும், ஊர் நெலு பறையொன்று ரூபா 6 வரையிலும் விலைப்படுகின்றது. நெல்வெட்டியபின் விதைக்கப்பட்ட குரக்கன் எள்ளு பயறு முதலிய சிறுதானியங்கள் இப்போது விளைந்து வெட்டப்படுகின்றன. சிறுதானியம் பலவிடங்களில் நன்றாய் விளைந்திருந்தும் அவற்றின் விலை குறையவில்லை. குரக்கன் கொத்து ஒன்று 25 சதம்வரையில் விலைப்படுகின்றது. எள்ளு பறையொன்று ரூபா 9வரையில விலைப்படுகின்றது. நெல்லின் விலை குறைந்தாலன்றி மற்றெந்த உணவுப்பொருளின் விலையும் குறையமாட்டாது.

சாராயக்குத்தகை விற்பனவு:—மத்தியமாகாணச் சாராயக்குத்தகையும், கழுத்துறை, ரத்தினபுரி ஊவா டிஸ்திறிக்களின் சாராயக்குத்தகைகளும் இந்த மாதம் 24௳ விற்கப்பட்டன. இக்குத்தகைகள் ஒவ்வொன்றும் சென்றவருட விலையிலும் குறைவான விலைக்கு விற்கப்பட்டிருக்கின்றது. மேற்குறித்தஇடங்களில் பல தவறணைகள் ஆங்காங்குள்ள மதுவிலக்குச்சங்கத்தாரின் முயற்சியால் எடுபட்டமையாலேயே இக் குத்தகைகளெல்லாம் குறைந்தவிலைக்கு விற்கப்பட்டிருக்கின்றன. கழுத்துறைக் குத்தகை யாழ்ப்பாணக் குத்தகைகாரன் ஸ்ரீ. கி. கதிரேசபிள்ளையவர்களால் ௨,௬௪,௬௬௬ ரூபாவாக் வாங்கப்பட்டிருக்கின்றது. சென்றவருடம் இக் குத்தகை ௨,௯௪,௯௦ ரூபாவாக விலைப்பட்டது.

உரும்பராய் இந்து ஆங்கில வித்தியாசாலைப் பரிசளிப்பு:—உரும்பராய் இந்து ஆங்கில வித்தியாசாலைப்பரிசளிப்புக்கூட்டம் சென்ற சுக்கிரவாரத்தன்று சாயந்தரம் நடைபெற்றது. அப்போது ஸ்ரீ. அம்பலவாணர் கனகசபையவர்கள் அக்கிராசனத்தமர்ந்திருந்தனர். இக் கூட்டத்திற்கு-பல திசைகளிலுமிருந்து. பல பிரபுக்கள் சென்று சமுகமளித்திருந்தனர். இவ் வித்தியாசாலை இப்போது அதிக விருத்தியடைந்திருக்கின்றதென்பது இவ் வித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயரால் வாசிக்கப்பட்ட அறிக்கைப்பத்திரத்தினால் நன்கு புலனாயிற்று. பிள்ளைகள் செய்த மனனப்பிரசங்கங்களும், அவர்கள் பாடிய கீர்த்தனங்களும் சகலரது மனத்தையுங் கவர்ந்தன. பிள்ளைகளுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டபின் ஸ்ரீ. N. செல்லத்துரைப்பிள்ளையவர்களும், ஸ்ரீ. T. R. கனகசபையவர்களும், டக்தர் இராமாசிபதியவர்களும் இவ் வித்தியாசாலைப் பண்டிதரும் அக்கிராசனாதிபதியவர்களும் குறிப்புரை கூறினர். அக்கிராசனாதிபதியவர்கள் தமது உபந்நியாசமுடிவில் உரும்பராய் வாசிகள் ஒருமித்துத் தங்கள் கிராமத்திலிருந்த கள்ளுச்சாராயத் தவறணைகளை நீக்கியதுபோல ஆலயங்களில் ஆடு கோழிகளை வெட்டும் வழக்கத்தையும் நீக்கிவிட வேண்டுமெனச் சொல்லினர்.

தேகவியோகம்.

கொழும்பு துறைமுக இஞ்சினீர்க்கந்தோரில் கிளாக்காயிருந்த Mr. A. S. கந்தையா அவர்கள் தமது 38-ம் வயதில் இந்த மேயீ 6௳ கொழும்பிலுள்ள ஜெனரல்வைத்தியசாலையில் தேகவியோகமாயினரென்னும் செய்தி பெரிதும் பரிதாபத்துக்குரிய தொன்றும். இவர் பண்டகசாலைப் பகுதியில், தலைமைக்கிளார்க்காகவிருந்து காலஞ்சென்றுபோன Mr. A. சண்முகம்பிள்ளையவர்களின் ஏகபுத்திரன், கொட்டடி ஸ்ரீ. ப. வேலுப்பிள்ளைஉபாத்தியாயரின் பெருமகன். கொழும்பு சென்தோமஸ்கல்லூரியில் கல்விகற்று, 1902௵ மெறிக்கல் பரீட்சையிற் சித்திபெற்று சென்றற்றறி ஆபீசில் 5 வருடம் வேலைபார்த்து 1907௵ மட்டக்களப்புப்பிசுக்கால் கந்தோருக்கு மாறுதல் பெற்று 1912௵ கச்சேரிக்கிளார்க்காய் நியமிக்கப்பட்டு அங்கு 2-ம் கிரையில் உயர்த்தப்பெற்று திறமையாயும், நேர்மையாயும், ஊக்கமாயும், கடமைபுரிந்துவந்து சென்ற ஐப்பசியில் மறுபடியும் கொழும்புக்கு மாறுதல் பெற்றார். சென்ற 2௳ நோய்வாய்ப்பட்டுத் தகுந்த வைத்திய சிகிச்சை பெற்றும், மரணதூதன் கையினின்றும் பிரித்துக் கொள்வதரிதாயிற்று. இவரது சுகயீனத்தை கேள்வியுற்றவுடன், இவரது மாதாமுதலியோர் மோட்டார் மூலம் கொழும்புக்குச் சென்றும் உயிரோடு காணாதது பெரிதும் துக்கமே. பிரேதம் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே தான் சைவசமய முறைப்படி சுற்றத்தாரும் சிநேகருமான பலர் சமுகத்தில் ஆலையடிச்சோலைச் சுடலையிற் தகனஞ் செய்யப்பட்டது. இவரை இழந்து துன்புறும் இவரது மாதா முதலிய சுற்றத்தாரோடு நமது அநுதாபமுமிருக்கின்றது. சடித.

நீர்வேலி இந்துவாலிபர் சங்கம்.

இச்சங்க மூன்றாவது வருஷக் கொண்டாட்டம் சித்திரைமீ 26௳ (8-5-20) சனிக்கிழமை மாலை எழுமணியளவில் இச் சங்க மண்டபத்தில் நடத்தப்பட்டது. அத்தருணம் சங்க உப அக்கிராசனாதிபதி ஸ்ரீமத் க. தியாகராசக்குருக்களவர்கள் அக்கிராசனம் வகித்தனர்.

தேவாரபாராயணமும் சிவநாமபஜனையும் ஸ்ரீ. க. ஆறுமுகம் அவர்களுடைய தலைமையின்கீழ் நடத்தப்பட்டபின் இச் சங்கக் காரியதரிசி அவர்களால் சென்ற கூட்டத்தின் அறிக்கைப்பத்திரமும் வாசிக்கப்பட்டது.

நொத்தாரிஸ் ஸ்ரீ சி. ஆறுமுகம் அவர்கள் இச் சங்கம் நாளுக்குநாள் மேலான நிலையை அடைந்துவருகின்றதென்றும், இவ்வூர்ச் சபாபிமானப் பிரபுக்களுடையபேருதவியினால் அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய குருபூசைகளும், இவ்வொரு நாயனாருடைய திருநட்சத்திரதினத்தில் அவ்வந்நாயனாருடைய திவ்வியசரித்திரத்தை இச்சங்கத்தைச்சேர்ந்த ஸ்ரீ. தாப்பிரசங்கப்பகுதியார் அதிக சிரத்தையோடுசெய்துவருகிற பிரசங்கமும் எவர்களுடைய மனதையும் கவரக்கூடியதாக இருக்கிறதென்றும், இக்குருபூசைகளையும், அடியார் சரித்திரப் பிரசங்கத்தையும் ஏனைய சங்கத்தாரும் ஏனையவூரவர்களும் இங்ஙனமே நடத்திவருதல் சைவசமயவிருத்திக்குப் போதிய துணையாகுமென்றுங் கூறிமுடித்தனர்.

ஸ்ரீமத் க. தியாகராசக்குருக்கள் அவர்கள் அடியார்பத்தியைப்பற்றியும், ஸ்ரீ. ஆ. அருணாசலம் அவர்கள் சங்க நன்மையைப்பற்றியும் பேசினர். ஸ்ரீசிற்சபேசன் அவர்கள் இச்சங்கத்தைமேலான நிலைக்குக் கொண்டுவருதற்குக் கைக்கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றிக் கூறியபின் சென்றவருட உத்தியோகஸ்தர்கள் அதிக சிரத்தையோடு கடமைபார்த்ததற்காக ஸ்துதிகூறினர்.

பின்னர் நொத்தாரிஸ் ஸ்ரீ சி. ஆறுமுகம் அவர்கள் எழுந்து அடுத்தவருஷ அக்கிராசனாதிபதியாக ஸ்ரீ. செ. அருளம்பலம் அவர்களைப் பிரேரிக்க, ஸ்ரீ. ஆ. அருணாசலம் அவர்கள் அநுவதிக்க கரகோஷத்துடன் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

ஸ்ரீமத். க. தியாகராசக்குருக்கள் அவர்களும், ஸ்ரீ. ஆ. அருணாசலம் அவர்களும், ஸ்ரீ. சி. ஆறுமுகமவர்களும் உப அக்கிராசனாதிபதிகளாகவும், ஸ்ரீ. வே. தப்புத்துரை அவர்கள் காரியதரிசியாகவும், ஸ்ரீ. க. ஆறுமுகம் அவர்கள் உதவிக் காரியதரிசியாகவும், ஸ்ரீ ச. சின்னப்பாபிள்ளையவர்கள் தனாதிகாரியாகவும், ஸ்ரீ இ அப்பாத்துரை அவர்கள் உதவித் தனாதிகாரியாகவும், ஸ்ரீ இ.ஆறுமுகமவர்கள் பரிசோதகராகவும் நியமனம்பெற்றனர். கூட்டம் முறைப்படி தேவாரபாராயணத்துடன் ஒன்பதரைமணிக்குச் சமாப்தியாயிற்று.

இச்சங்கத்தவரால்நடத்தப்படும் குருபூசையின் இரண்டாவது வருஷக் கொண்டாட்டம் திருத்தொண்டர்புராணத்தைத் திருவாய்மலர்ந்தருளிய சேக்கிழார்நாயனார் முத்தியடைந்த சுபதினமாகிய வைகாசிமீ 10௳ (23-5-20) ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெற்றது. கடித.

தந்திச் சமாச்சாரம்.

துருக்கிசுல்தானுக்கு அனுப்பிய தந்திநிருபம்:

இந்திய கலாபத் சங்கத்தைச் சார்ந்த பிரதிநிதிகளாகிய மகமட்ஆலி, செயத்குசெயின், செயட்சுலிமான், நபிவிக், அப்துல் காசிம் என்னுமிவர்கள் தங்கள் கைச்சாத்துடன் துருக்கிசுல்தானுக்கு ஒரு தந்திநிருபம் அனுப்பியிருக்கின்றனராம். இவர்கள் 7,00,00,000 மகமதிய மதத்தினர்க்கும 25,00,00,000 மகமதிய அநுதாபமுள்ள சனங்கட்கும் பிரதிநிதிகளாம். இவர்கள் ஸ்லாமார்க்கத்துக்கு வந்த இடையூற்றை நீக்குவதற்கான முயற்சிகளைச் செய்வதில் தாமும் உடன்நின்று உதவிசெய்வதாகச் சுல்தானுக்குத் தெரிவிக்கின்றனர். துருக்கி சுல்தானே தங்கள் குருவாகிய மகமதின் பிரதிநிதியென்றும், கலாபத்தை இப்படியான நிலைக்குவரவிடுத்தமை வெட்கமான காரியமென்றும் ஸ்ராம்பூல்விஷயத்திலேயே ஸ்லாமானவர்கள் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனரென்றும், ஸ்லாஞ்சமயத்தை என்ன சங்கடம் வந்தாலும் சுல்தான் தளரவிடாது பரிபாலித்தல் வேண்டுமென்றும் கூறியிருக்கின்றனர். மேலும் ஐக்கிய நேசராச்சியத்தினர்க்கு மகமதியர் அனுப்பிய நிருபத்தில் மகமதியருக்குரியவிஷயங்களும் சிரியா, பலஸ்தைன், மெஸ்பொற்றேமியா முதலிய இடங்களும் மகமதியரல்லாதார் கீழ்ப்பார்வையிலிருக்க மகமதியர் ஒருபோதும் ஒத்துக்கொள்ளார்களென்றும், இவ்விஷயங்கள் மகமதின் மரணகாலத்தில் அவர்கள் சிஷர் பொறுப்பிலேயே நம்பி விடப்பட்டனவென்றும் தெரிவித்திருக்கின்றனர். ஐக்கிய இராச தந்திரிகள் ஸ்லாமார்க்கத்தினரை யுத்தவீரர்களாகச்சேர்த்த காலத்தில் "துருக்கியைக் காப்போம்" என்று சொன்ன வாக்கை நிறைவேற்றாது விட்டனரென்றும், ஆங்கில அரசாங்கத்தினர் தங்கள் வாக்கை நிறைவேற்றாதுவிட்டால் இந்திய ஆளுகை சமாதானமாயிருக்கமாட்டாதென அவர்கட்குத் தாம் தெரிவித்திருப்பதாகவும் கூறுகின்றனர். இந்த விஷயமாக இந்திய மகமதியரெல்லாருஞ் சுல்தானையே நம்பியிருப்பதாகவும் எவ்வகையான பயமுமின்றி அல்லாவின் கட்டளைகளை நிறைவேற்றுதற்குத் தாங்கள் ஆயத்தமாயிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

துருக்கியரின் செயல்.

யுத்தசமாதான நிபந்தனைகளைக் கவனியாது துருக்கியர் ருசியதுருக்கி யெல்லைகோட்டிலுள்ள சைனியத்தை இதுகாறும் திருப்பிக் கூப்பிடாமலிருத்தல் குற்றமென்றும் காக்கஸ்மலைப்பகுதியிலாயினும், ஆர்மேனியாப்பகுதியிலாயினும் ஐக்கியராசாங்கத்தினர்க்குரிய சைனியங்கள் இல்லையென்றும் சேர் சிசில் என்பவர் பார்லிமென்றிற் சொல்லினர்.

பூர்பா என்னுமிடத்தில் 450 பிரான்சிய சைனியத்தைத் துருக்கியர் 61நாட்களாகத் தடைசெய்து வைத்துப் பின்னர் பிறிஜிக் என்னுமிடத்திற்குப் போக விடுத்தனர். அவர்கள் போகுஞ்சமயத்தில் 2000 துருக்கியர் அவர்களைத் தாக்கி அவர்கள் 100 பேரொழிந்த ஏனையோரைக் கொன்றுவிட்டனராம்.

கடிதம்.

மாணிக்கமாலை சரித்திரம்.

குலோத்துங்க பாண்டியன் மதுரையை அரசுபுரியுங் காலையில் வேறு தேசத்தவனாகிய வயோதிகன் ஒருவன் அம்மதுரையில் இருந்து வாள் வித்தை கற்பித்துச் சீவனஞ் செய்துவந்தான். அப்படி அவன் வாள்வித்தை கற்பிக்கும் மாணாக்கர்களுள், சித்தன் என்னும் பெயரையுடைய ஒருவனுளன். அவன் தன் விவேகத்தினால் அவ்வித்தையை நன்கு கற்றுக்கொண்டான் அதனால் அவன் கர்வமடைந்து தன்னாசிரியனுக்கு மாறாய்த் தானும் ஒரு வித்தியாகூடம் உண்டாக்கி அநேகருக்கு வாள்வித்தை கற்பித்துவந்தான். பின்னர், அவன் அவ்விருத்தனை அவ்வூரினின்றுந் துரத்தக்கருதி நாள்தோறும் அவனுக்கு இடையூறு செய்துவந்தான். தன்னாசிரியன் இல்லாதபொழுது அவனுடைய மனைவியிடத்தே போய் 'இடமுண்டோ இடமுண்டோ" என்று அஞ்சாது கேட்கக்கேட்க அவள் பேசாதிருந்தாள். பின்னொருநாள் போய் அவள் கையைப் பிடித்திழுத்தான். அவள் அவனைத் தள்ளிவிட்டு உள்ளே போய்க் கதவை அடைத்துக்கொண்டு தன் கற்பைப் பாதுகாத்தாள். கற்பினிற் சிறந்த அப் பெண்ணானவள் அக்குருத்துரோகியாகிய சித்தன் செய்த இழிசெயலைத் தன்னாயகனுக்குச் சொல்லாது தங்கள் குலதெய்வமாகிய சோமசுந்தரக் கடவுளை நினைந்து மனம் நொந்தாள்.

சோமசுந்தரக்கடவுள் அவ்விருத்தனைப்போல் வேடங்கொண்டு அச்சித்தனிடஞ்சென்று 'இளம் வயதுடைய நீயும், கிழப்பருவடைய நானும் வாட்போர் செய்து நமது வலிமையையறிவோம்' என்றார். அதைக்கேட்ட சித்தன் மிகவும் மகிழ்ந்து அதற்குடன்பட்டான். மற்றநாள் குருத்துரோகியாகிய அசித்தன் ஜெயலெட்சுமியைத் துதித்துக் கச்சைக்கட்டிக் கையில்வாளெடுத்துக்கொண்டு ஆசிரியன் சொல்லிய போர்க்களத்தை அடைந்தான். ஆசிரியன் வேடங்கொண்ட சோமசுந்தரக் கடவுள் விபூதி அணிந்துகொண்டு போர்க்களத்திற்கு வந்தார். சோமசுந்தரக்கடவுளும் சித்தனும் அநேக சனங்கள் காண வாட்போர் செய்தார்கள். அப்படி யுத்தஞ்செய்யும்பொழுது அனைவருங் கேட்கும்படி 'உன் குருபத்தினியை நினைத்த நெஞ்சையும், குறித்துப் பேசிய நாவையும், தொட்ட கையையும், பார்த்த கண்களையும், காத்துக்கொள்' என்று சொல்லி அவ்வுறுப்புக்களைத் தக்கபடி தண்டித்துத் தலையையும் வெட்டி வீழ்த்திவிட்டுமறைந்தார்.

அப்பொழுது வாள்வித்தை பயிலும் மாணாக்கர் தம்மாசிரியனைக் காணாது அவன் வீட்டிற்குச் சென்று ஆசிரியர் எங்கேயென்று அவன் மனைவியை வினவ "அவர் கோயிலுக்குப் போனார்" என்று விடையளித்தாள். அப்பொழுது கோயிலுக்குப்போன ஆசிரியன் திரும்பிவந்தான். மாணாக்கர் அவனை நோக்கி "நீர் போர்க்களத்தில் சித்தனோடு யுத்தஞ் செய்து அவனுடைய அவயவங்களை வெட்டினீரே. பின்பு நாங்கள் எங்குந்தேடியும் உம்மைக் காணாது இங்கே வந்தோம்' என்று சொன்னார்கள். அதுகேட்ட ஆசிரியன் "நான் சித்தனுடைய அங்கங்களை வெட்டவில்லையே. நீங்கள் சொல்வதின் அருத்தமென்ன? இது சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாடல் போலும்' என்றான். அதுகேட்ட அவன்மனைவி சித்தன் தன்மேற்கொண்ட வஞ்சனையான எண்ணத்தைச் சொன்னாள். மாணாக்கர் ஆசிரியனை நோக்கி "ஐயா, இவ்வம்மையார் சொல்லியபடியே அங்கு வந்த வாள்வீரர் சொல்லிச் சித்தனைக் கொன்றார்" என்று சொன்னார்கள். பின்பு ஆசிரியன் தன்மனைவியோடும் மாணாக்கர்களோடும் கோயிலுக்குச் சென்று சோமசுந்தரக் கடவுளை வணங்கினான். இதைக் கேள்வியுற்ற குலோத்துங்க பாண்டியனும் மதுரைமாநகரத்துள்ளாரும் சோமசுந்தரக்கடவுளை வியந்து, அவருடைய திருப்பாதங்களை வணங்கி ஆனந்தக்கூத்தாடினார்கள், பின்பு குலோத்துங்க பாண்டியன் ஆசிரியனையும் அவன்மனைவியாராகிய மாணிக்கமாலையையும் யானைமீதேற்றி நகர்வலஞ் செய்வித்தான்.

குறிப்பு:—இச்சரித்திரத்தில் நாஞ் சிந்திக்க வேண்டிய இருவிஷயங்களுள், இம்மாணிக்கமாலை, சித்தன் தன்னைப் பலாத்காரஞ் செய்ய முயன்றபோது, அச்செய்தியைத் தன்னாயகனுக்குத்தானுங் கூறாது, அநாதரக்ஷகராகிய திருவாலவாய்த் தெய்வத்திற்கு முறையிட்டாள். இது கற்புடைமகளிருக்குரியகுணங்களிலொன்றாகும். இனி, சித்தன், "தன்னையளித்தான் தலையவன் மனை குருவின், பன்னி அரசன் பயில்தேவி-தன் மனையைப் பெற்றாள், இவைவர் பேசிலெவருக்கும், நற்றாயரென்றே நவில்." என்ற பிரகாரம் தன்னாசிரியன் பன்னியாதலின் தனக்குத் தாயென்பதையுஞ் சிந்தியாது, குருத்துரோகமென்பதையும் நோக்காது, செய்ந்நன்றி கொல்லலென்னுங் குற்றமென்பதையும் பாராது, இப்பெருந் தீச்செயல்புரியத் துணிந்தமையினாலும், வாளாசிரியன் தம்மீது மிக்க பத்தியுடையவனாதலினாலும், அவன் மனைவி தன்னாயகனுக்குங் முறையிடாது, ஆண்டவனாகிய தமக்கு விண்ணப்பஞ் செய்தமையினாலும், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலன மூர்த்தியாகிய சோமசுந்தரப் பெருமான் தாமே வாளாசிரியன் போலத் திருவேடங்கொண்டு சித்தனைத் தண்டித்தருளினார்.

இங்ஙனம்,
க நவரத்தினம்மாள்,
வண்ணார்பண்ணை.

ஏழைகளை வருத்தும் நெல்லரிசிக் கட்டுப்பாடென்னும் பஞ்சாக்கினியானது எப்போது அவியுமோ?

அறிவான் மித்திரா!

சென்ற திங்கட்கிழமை காலமே நான் நெல்லரிசி விற்கும் லைசென்சுக்காரர் ஒருவருடையகடையிற்போய் அவரோடு பேசிக்கொண்டிருக்கும்போது, அயற்பக்கங்களிலேயுள்ள ஏழைக் குடும்பங்களைச்சேர்ந்த 7, 8 வயதுள்ள 3, 4 பெண்குழந்தைகள் ஒவ்வொருவரும் அந்தக் கடையில வந்து பறைவெட்டி அரைப்படி நெல் காற்படி நெல் வாங்கிக்கொண்டு போனார்கள். நான் அவர்களில் ஒரு சிறுமியை அழைத்து, தங்கச்சி! காலமே இந்தக்காற்படி நெல்லை எந்தேவைக்காக வாங்கிக்கொண்டு போகின்றாய்? என்று வினவினேன். அதைக் கேட்ட சிறுமி, ஐயா! காலைப் பசிக்குக் குத்திக் கஞ்சி காய்ச்சிக் குடிக்க வாங்கிக்கொண்டு போகிறேனென்று சொன்னாள். உங்கள் வீட்டில் சாப்பாட்டுக்காரர் எத்தனைபேர்? இந்தக் காற்படி நெல்லு உங்களுக்குக் காணுமா? இப்போது கொண்டுபோய்ப் பச்சையாய்க் குத்தினால் அரிசியாய் வரமாட்டாதே? இடித்து மாவாகப்போகுமே? என்று கேட்டேன். அதற்கு அவள் ஐயா! எங்கள் வீட்டிலே சாப்பாட்டுக்காரர், அப்புவும் ஆச்சியும் அக்காவும் நானும்; ஆக நாலுபேருண்டு. அப்புவுக்கு உடம்புக்குச் சுகமில்லாததினால் 3, 4 நாட்களாக வேலைக்குப் போகவில்லை. அதனால் அரிசிவாங்கக் காசில்லாமையினால் சென்றதிராத்திரியுஞ்சமைக்கவில்லை. இன்று காலமே ஆச்சி என்னையெழுப்பிக் காற்படி நெல்லாவது வாங்கிவந்து குத்திக் கஞ்சி காச்சிக் குடியுங்களென்று நாலு சதந் தந்தா; அதைக் கொடுத்துத்தான் இந்தக் காற்படி நெல் வாங்கிக்கொண்டு போறேனென்று சொன்னாள். புண்ணியசீலர்களே! காற்படி நெல்லுக் குத்திக் கஞ்சிவைத்தால் இராப்பட்டினி கிடந்த நாலு பேருக்குக் காணுமா? ஒருவருக்குக்கூடக் காணமாட்டாதே. அந்தோ! அந்தோ!! சகிக்கற்கரிய இத் துக்க சம்பவத்தைக் கேட்கத்தானும் நெஞ்சம் பரிதவிக்கின்றதே! இப்படி எத்தனையாயிரம் குடும்பங்கள் அல்லும்பகலும் பசிபட்டினிகிடந்து தவிக்கின்றன. ஐயையோ! இப்பரிதாபநிலையை எடுத்துப்பார்ப்பார் ஒருவருமில்லையா? ஏழைகளுடைய இலம்பாடுகளை அரசாட்சியாருக்குக் காலத்துக்குக்காலமெடுத்துக்கூறி அவைகளை நிவிர்த்திசெய்வதற்காக மந்திரஸ்தர்களாகவெளிக்கிட்ட சனப் பிரதிநிதிகாள்! ஏழைகளுடைய பிரலாபம் உங்கள் திருச்செவிகளுக்கு எட்டவில்லையா? நாய்வேடம்பூண்டால் குரைத்துத் தீரவேண்டுமல்லவா? சனங்களுடைய பிரதிநிதிகளாகவேற்பட்டநீவிர் அவர்களுடையஇன்னல்களை நீக்க முயலாமல் மௌனஞ் சாதிப்பது நீதியாகுமா? இரக்கமிகுந்த இலங்கைக் கவண்மேந்தார் தங்கள் பொக்கிஷப் பணத்திலாவது எடுத்துக் கொடுத்து நெல்லரிசி விலையைக் குறைத்துவிற்கும்படி செய்யவேண்டுமென்று தேசாதிபதியவர்களைக் கேட்கலாகாதா? அப்படி நெல்லரிசியைக் குறைத்து விற்கும்படி செய்ய இப்போது பொக்கிஷத்திலே பணமில்லையென்று அவர்கள் சாட்டுச் சொல்லுவார்களாயின், உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கப் பொக்கிஷத்தில் பணமிருக்குது; ஏழைகளுடைய இம்சைகளை நீக்கத்தான் பொக்கிஷத்தில் பணமில்லாமற்போய்விட்டதா? என்று கேளுங்கள். இத்தவிஷயத்தில் தாட்சண்யம் பார்த்தால் செய்நன்றி மறந்தவர்களாய்ப் போய்விடுவீர்கள். நீங்கள் செல்வப்பிள்ளைகள்; உங்களைப்போலவே மற்றவர்களுமிருப்பார்களென்று நினையாதீர்கள். மேலே பார்ப்பதைவிட்டுக் கீழே பாருங்கள். பஞ்சத்தின் கொடுமையினால் நடுத்தரமானவர்களும் ஏழைச்சனங்களும் படுகஷ்டங்களை எழுதக் கை நடுங்குகின்றதே! எத்தனையோ ஏழைச்சனங்கள் புளியையரிந்துகொண்டு குப்பையிலே கொட்டும் புளியங்கொட்டைகளை வறுத்துக் குத்தித் தோலைப் போக்கி நனையவைத்து இடித்துச் சாப்பிடுகிறார்கள். வழக்கத்திலே தேடுவாரின்றி மாடு தின்ற காலிலே மிதிபடுகிற இலுப்பைப்பூ, இவ்வருஷத்தில் பொன்போலப் போற்றப்படுகின்றது. வெள்ளைவேட்டிக்காரர்கூட பாதிச்சாமத்தில் எழுந்துபோய்ப் பொறுக்கிக்கொண்டுவந்து வெய்யிலிலேகாயப்போட்டுப் பறைக்கணக்காகச் சேமித்து வைக்கிறார்கள். மாட்டுக்கு வைக்கிற நெல்லரிசித் தவிட்டைச் சிறிதும் புறம்போகவிடாது தெள்ளியெடுத்துப் பிட்டவித்துச் சாப்பிட்டுக் காலங்கழிக்கிறார்கள். இங்ஙனமாக இக்காலம் ஏழைகள் படும் இன்னல்களை எத்தனையென்று எடுத்துக் கூறலாம். இவைகளெல்லாம் சுயகாரியப் புலிகளாகிய பிரபுக்களுடைய கட்பார்வைக்குப் புலப்படமாட்டா. ஏழைகளுடைய வயிற்றிலிருந்து எழும் உதராக்கினி யாரைத் தகிக்குமோ? ஏழைபழுதகண்ணீர் வீண்போகமாட்டாது! உத்தரத்தில் தடிக்கிறசாற்றைத் தெட்சணத்திலும் மாறியடிக்கிறகாலமும் ஒன்றுவரும். யாழ்ப்பாணம் கவண்மேந்தார் அரிசித்துண்டை எடுத்ததனால்ஏழைகளுக்கு ஏதோ நயம்வந்ததாக எண்ணுகிறார்கள் அதனால் காசுள்ளவர்க்கே நயந்தான்; அவர்கள் தாராளமாக வாங்கி மூப்போதுஞ் சாப்பிடுவார்கள். விலைகுறைந்தாலன்றி ஏழைகளைவருத்தும்பட்டினி ஒருபோதும் விமோசனமாகமாட்டாது. சனம் மேலுத்தியோகஸ்தர்கள் கருணைகூர்ந்து "பக்கச்சொல்லும்பதினாயிரம்" என்றதுபோல யாழ்ப்பாணப் பிரசைகள் படுங் கஷ்டங்களைக் [illegible] பலமுறையும் எடுத்துக்கூறி அரிசித்துண்டை எடுக்கும்படி செய்ததுபோலச் சனங்களைப் பல வழியாலும் கஷ்டப்படுத்தாமல் இன்ன விலைக்குமேல் விற்கக்கூடாதென்று சட்டம்பண்ணிக் கொண்டு பழமைபோலச் செட்டிப்பிள்ளைகளையே ஒருமூடை முதல் சில்லறையிலும் ஒரு பறை அரைப்பறையாயும் அளந்து விற்க உத்தரவுபண்ணுவார்களென்று எதிர்பார்த்திருக்கின்றேம்.

இங்ஙனம்,
க. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

பாழ்நிலங்களின் கட்டளைச்சட்டத்தைப்பற்றிய அறிவித்தல்.

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடமைத்தையாயினும் தம்முடையதென உரித்துப்பேசுவோர் யாருமிருந்தால், அவர்கள் 1920-ம் ஞூ (மே) வைகாசி மாதம் 1½-ம் திகதி துவக்கம் மூன்றுமாசத்திற்குள் 1897-ம், 1899-ம், 1900-ம், 1903-ம் ஆண்டுகளின் பாழ்நிலச் சட்டங்களின் 28-ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் பிறடறிக் லூயிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும், தமக்குரியதெனும் உரித்தை அல்லது உடமையைத் தெருவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகஸ்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாகிய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவைகளை முடிக்குரியதெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

பிறடறிக் லூயிஸ்,
54 விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு:—இக்காணிகளைவற்றிலேனு முள்ள வழியுரிமை அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்து கொள்க.

சட்டிய காணிகளின் விவரம்.

வடமாகாணம் மன்னார் டிஸ்த்திறிக் முசலிப்பிரிவு (வடக்கு), வேப்பங்குளம், புளியடிக்குளம், சாய்புளியங்குளம், அக்கட்டி முறிப்பு, கரிசலைசான், ஆட்டிக்குளம் என்னும் கிராமங்களிலுள்ள விபரிதப்படியே கீழ்க்குறிக்கப்படும் காணித்துண்டுகள்:—

1.—பிரதமபடம் 5,144

காணித்துண்டு. காணிப்பெயர். விசாலம் ஏ. றூ. ப.
1. மாவில்லுச்சோலைக்காட்டுச்சேமிப்பு 23, 140 3 25

எல்லைகளாவன:- வடக்கு-முடிக்குரிய பெரிய பறட்டைக்காடு, பறையனாலங்குளக் கிராமத்துக்குப்போகும் றோட்டு; கிழக்கு-முடிக்குரிய பத்தைக்காடு, முடிக்குரிய கரிசலைச்சான் திருகோண அளவை ஸ்தானச்சேமிப்பு; தெற்கு-கடைசித்தொட்போப்படம் 8/ காணித்துண்டு 1F (பகுதி), பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட மாவில்லுச் சோலைக்காட்டுச் சேமிப்பு, ஆர்ச்செட்டி ஆதின் பகுதி, பாழ்நிலக் கட்டளைச் சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட மாவில்லுச் சோலைக்காட்டின்பகுதி, முடிக்குரிய மாவில்லு (பகுதி), முடிக்குரிய ஒரு கிராமறோட்டு, முடிக்குரிய கீழ்க்காடு; மேற்கு முடிக்குரிய கீழ்க்காடு, முடிக்குரிய சாதனைகுமவில்லு.

II.—பிரதமப்படம் 5,144.

காணித்துண்டு. காணிப்பெயர். விசாலம், ஏ. றூ. ப.
1A சதகுளமவில்லு. 16 2 8

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய பெரும் பத்தைக்காடு; கிழக்கு-முடிக்குரிய மாவில்லுச் சோலைக்காட்டுச்சேமிப்பு; தெற்கு-முடிக்குரிய மாவில்லுச்சோலைக்காட்டுச்சேமிப்பு, முடிக்குரிய கீழ்ப்பத்தைக்காடு; மேற்கு-முடிக்குரிய கீழ்ப் பத்தைக்காடு.

III.—பிரதமபடம் 5,144.

காணித்துண்டு. காணிப்பெயர். விசாலம், ஏ. றூ. ப.
1B மாவில்லு (பகுதி) 36 0 0

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய மாவில்லுச் சோலைக்காட்டுச்சேமிப்பு; கிழக்கு - பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட மாவில்லின்பகுதி; தெற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட மாவில்லின்பகுதி, முடிக்குரிய கீழ்ப் பத்தைக்காடு; மேற்கு-முடிக்குரிய கீழ்ப்பத்தைக்காடு, ஒரு றோட்டு.

IV.—பிரதமபடம் 5,144.

காணித்துண்டு காணிப்பெயர். விசாலம், ஏ. றூ. ப.
1½ கரிசலைச்சான் திரிகோண அளவைஸ்தானச்சேமிப்) 10 1 0

இதற்கெல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய மாவில்லுச்சோலைக்காட்டுச்சேமிப்பு, முடிக்குரிய கீழ்ப்பத்தைக்காடு; கிழக்கு-முடிக்குரிய கீழ்ப்பத்தைக்காடு; தெற்கு-முடிக்குரிய கீழ்ப் பத்தைக்காடு, முடிக்குரிய மாவில்லுச் சோலைக்காட்டுச் சேமிப்பு; மேற்கு-முடிக்குரியமாவில்லுச்சோலைக்காட்டுச்சேமிப்பு.

அறிவித்தல் இல. 7533 மன்னார் வி. உ. 3-1920

ஓர் உபாத்தியாயர் தேவை

கண்டி மியூனிசிப்பல் தமிழ் வித்தியாசாலைக்கு தராதலப் பத்திரம் பெற்ற ஓர் தமிழ் உபாத்தியாயர் தேவை சம்பளம் மாசம் 20 ரூபாவும் வீட்டுவாடகையின்பொருட்டு மாசம் 2 ரூபா 50 சதமும் கொடுக்கப்படும். இவற்றுடன் கண்ணே மேற்று உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கப்படுவதுபோல சம்பளம் சிறிது காலத்துக்கு உயர்த்திக்கொடுக்கப்படும்.

விரும்புவோர் மத்தியமாகாணம் வித்தியாசாரிசுக்கு 1920-ம் ஆ ஜூன் மீ 5-ம் தேதிக்குமுன் எழுதவேண்டும்.

உத்தமனர் சட்டளைப்படி,
Jas JAYETILLEKE,
Secretary
Municipal Council, Kandy.

Municipal Office,
Kandy 18th May 1920. 57

மெடிக்கல் டிபாட்மென்றைச்சேர்ந்த ஒப்பந்தங்கள்.

1920-ம் ஆண்டு ஐப்பசி மீ 1-ந் திகதி தொடக்கம் ஒருவருஷத்திற்கு பலப்பிட்டி, தெனியாய், அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மன்னார், பருத்தித்துறை, தங்காலை, திஸ்ஸமகாராமம், திரிகோணமலை, வவுனியா என்னுமிடங்களிலுள்ள அரசாட்சியாரின் ஆஸ்பத்திரிகளுக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுக்கிறதற்கு ஒப்பந்த கேள்விப்பத்திரங்கள் அனுப்பலாம்.

கேள்விப்பத்திரக் கடதாசிகள் கொழும்பில் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடமிருந்து எடுக்கப்பட்டு, 1920-ம் ஆண்டு ஆனி மீ 8-ந் திகதி மத்தியானம் 12 மணிக்குமுன் ஒப்பந்த விசாரணைக் கந்தோரில் சேரவேண்டும். அந்த கோத்துக்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

இன்னும் தேவையான விபரங்களை, பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடமிருந்து, அல்லது அரசாட்சியாரின் 'கசற்' பத்திரிகையிலிருந்து அறிந்துகொள்ளலாம். 53

அறிவித்தல்.

இத்தால் சகலருமறியவேண்டியது: தற்காலம் வதுளை தெனிவத்தைதோட்டத்திலிருக்கும், யாழ்ப்பாணம் அராலி கிழக்கு சவரப்பிள்ளை கந்தசாமியும், பெண் தங்கமுத்துவுமாகிய நாங்கள், வதுளை பிரசித்த நொத்தாரிஸ் அல்விறட் போலியர் பர்தலமியூஸ் அவர்கள் முன்பாக 248ம் இலக்கத்தில் 1914-ம் ஆ புரட்டாதி மீ 19உ முடித்த உறுதியின்படி யாழ்ப்பாணம் அராலி கிழக்கு ஆறுமுகம் சவரப்பிள்ளைக்குக் கொடுத்த அற்றோணித்தத்துவத்தை அழித்துவிட்டோம்.

இதன்பின் அவர் மேற்சொல்லிய உறுதியைக் கொண்டு செய்கிற எந்தக் காரியத்துக்கும் நாங்கள் பாத்தியப்படமாட்டோம்.

இங்ஙனம்,
தெனிவத்தைதோட்டம் ச. கந்தசாமி
ஆஸ்பத்திரி ச. தங்கமுத்து
வதுளை, 1020-ம்-ஆ சித்திரை மீ 15உ. 16

சகலவிதமான அச்சுவேலைகளும்

மிக அழகாகவும்
வெகு விரைவாகவும்
செய்துகொடுக்கப்படும்.

சைவப்பிரகாசயந்திரசாலை
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை

புதிய கையொப்ப நேயர்கள்.

எமது பத்திரிகைக்குப் புதிய கையொப்ப நேயர்களாகச் சேர விரும்புவோர் ஒருவருடப் பத்திரக்கிரயத்தை முற்பணமாக அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

"இந்துசாதன" மானேசர்.

விளம்பரம்.

பேசல்மிசன் ஓடுகள்.

உலகப்பிரசித்தியான இவ் ஓடுகள் புதிதாய் அனுப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஓடுகள் உறுதியானவை; நன்குணர்ந்தவர்களாயுள்ளவர்களால் மற்றைய ஓடுகளிலும் திறமானவையெனக் காணப்பட்டிருக்கின்றன. தட்டோடுகள், முகட்டோடுகள், அரையோடுகள், கார்றேடுகள், தளவரிசைக்கற்கள் முதலியன இப்போது இருப்பிலிருக்கின்றன.

William Mather & Sons,
Agents
Basel Missien,
8 Tile Works.

கேசரஞ்சித தைலம்.



இத்தைலம் நான் உபயோகித்த தைலங்களில் மிகச்சிறந்தது" என்று கல்கத்தா நியாயப்பிரமாணகல்லூரித் தலைமை ஆசிரியர் பரிஸ்தர் டக்தர் பாஜி எல். எல். டி. அவர்களும்,

"இத்தைலம் சுகமணமுள்ளது தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியது" என்று டக்தர் பரிஸ்தர் எல். எம். மித்திரா எம். ஏ. எம். டி. அவர்களும்,

"தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுப்பதற்கு மிகச்சிறந்தது" என்று டக்தர் எம். என். பானேர்ஜி எம். டி. அவர்களும்,

"இது நல்ல கேசரஞ்சித தைலம் தலைக்குக் குளிர்ச்சியைத் தருகின்றது" என்று டக்தர் எஜ். என். கோஷ் எம். டி. அவர்களும்,

"இதிலும் அதிக நயத்தைக் கொடுக்கக்கூடிய தைலம் வேறில்லை" என்று டக்தர் யூ. மித்திரா எம். டி. எம். ஆர். ஏ. எஸ். எல். சீ. எஸ். அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

கேசரஞ்சிததைலம் விலை.

புட்டி 1-க்கு ரூபா 1. தபாற்செலவின்றி ரூபா 1-8-5.

புட்டி 3-க்கு ரூபா 2-8-4. தபாற்செலவின்றி ரூபா 2-8-14

சித்தமகரத்துவாச.

சித்தமகரத்துவாச என்னும் 'தொனிக்' ஆயுள்வேத ஔஷதங்களுள் மிகச்சிறந்தது. இது விலைபெற்ற மருந்து. ஏனெனில், இதில் தங்கம் சேர்ந்திருக்கின்றது. இது நெருப்புக்காய்ச்சல் முதலிய காய்ச்சல்களையும், காட்பட்ட கழிச்சல் நோயையும், மேகச்சூட்டையும், பிரசவத்தின் பின் பெண்களுக்குண்டாகும்நோய்களையும், மண்டைப்பெலவீனத்தையும், ஞாபகக்குறைவையும், நரம்புத்தளர்ச்சியையும், கண், முகம், தோல் முதலான விடங்களிலுண்டாகும் வெளுப்புத் தோற்றத்தையும், கீரிழிவு, சோர்வாதம், குன்மம், வலி, க்ஷயரோகம்முதலிய நோய்களையும் இது அதிசயப்படக்கூடிய விதமாய்ப் போக்கடிக்கும்.

இதன்விலை தோலா 1-க்கு ரூபா 80. ஒருகிழமைக்கு உபயோகிக்கக்கூடிய மருந்து ரூபா 3.

வியாதிகளினதும் மருந்துகளினதும் விபரங்களடங்கிய 'சற்லக்கு'கள் வேண்டியவர்களுக்கு இனமாயனுப்பப்படும்.

வியாதிகளைப்பற்றிச் சுருக்கமாயெழுதி யறிவித்தால் மருந்தோடு அல்லது மருந்தில்லாமல் இந்தியா, பேர்மா, இலங்கை, தொலைவ பிரதேசம் முதலியஇடங்களுக்கு "பிறிஸ்கிறிப்ஷன்" (Prescreption) அனுப்பப்படும்.

KAVIRAJ N. N. SEN,
GOVT. MEDICAL DIPLOMA HOLDER,
18-1 & 19, Lower Chitpur Road,
01 CALCUTTA.

இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாளவேரும் மருந்துகளின் விபரம்.

1. கெர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்பஉற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௪.

2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.

இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூ. ௨, அணா ௮.

3. பிரமேக வியாதிக்குச் சத்துச்செந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௨.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின் எந்தஇடத்திலும் தங்கியிருக்கும்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தே காண்டீபம். ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.

௧௪ மாத்திரை புட்டி ஒன்று ரூ. ௧, அணா ௮.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகரோகமுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். ௨௨ நாள் மருந்து ரூ. ௨.

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔடதம்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூ. ௧, அணா ௮.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்.

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும்.

௨௨ நாள் மருந்து ரூ. ௨.

8. மூலிகை ரத்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற்சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாவிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் குளிர்ச்சியுடனிருப்பதுமன்றி ஒருவாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ. 1.

9. பரிமள பற்பொடி.

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப் போலிருந்து சுகமணத்தைச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் தீர்க்கும்.

டப்பி 1-க்கு ரூ. 0-4-0 டசன் 0-க்கு ரூ. 2-12-0.

10. டாக்டர்மேக சஞ்சீவி செந்தூரம்.

மேகரோகம் இரோகத்திலும் எவ்வித பத்தப் பிடையினையும் உடனே குணமாக்கும்.

டப்பி ௧-க்கு அணா ௪. டசன் ௧-க்கு ரூ. ௨, அ. ௮.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறாதீர்கள்! இதுசமயம்!! தவறாதீர்கள்!!!

உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(அ) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்னின்னதாகும் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் சகிதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்னவிதமுடியுமெனும் சஞ்சுமுகமாதன் திருகருணால் வரைந்தனுப்புவோம்,

(ஆ) ௧. ஆயுட்பாகம், ௨. எத்தவிதத்தினால் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எத்தனை, ௫. அது முன்னுபின்னு, ௬. புத்திரனுண்டா, ௭. தலம் வைத்துப் போனேனு, ௮. மரணமானுமிடம் சுயதேசமா, ௯. சொத்தவீடு நிலம் கிட்டுமா, ௧௦. கடன் எப்போது நிவர்த்தியாகும், ௧௧. வியாபாரம் ஜெயமாகுமா, ௧௨. பிணைத்தகாரியம் முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ. ௧.

முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.

௧௨ பாகம் சார்ஜ் ரூ. ௫.

பாதிச்சார்ஜு முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்டில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம் எழுதினால் ஜோதிஷ, வைத்திய "லிஸ்டுகள்" இனாமாக அனுப்புவோம்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தநாயிகாயுடு,
ஜோதிஷம், வைத்தியம்,
மேகேச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும். 11

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டக்கோவைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாண ஐக்கிய லாபநிதியில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணைதப்பி (மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் வருகிற ஜூன் மாதம் 1-ந் திகதி (வைகாசி 19) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி நிதி ஆபீஸில் பின்னால் விபரிக்கப்படும் அடைவு நகைகளை வண்ணார்பண்ணை மேற்கு உடையார் சி. ஐயம்பிள்ளை அவர்கள் லெக்கீஸ் மேஸ்தராயிருந்து விற்பார்கள்.

இல.	பெயர்.	விலாசம்.	ஆண்டு மாதம் திகதி. 1919	நகை.	ரூபா சதம்.
104	இளையதம்பி கந்தையா	சிவியாதெரு மேற்கு	4-2-19	பொன் மோதிரம் 1	8 00
112	முருகேசு கணபதிப்பிள்ளை	வண். மேற்கு	10-2-19	சவுத்தோர் 1	33 00
134	ஆறுமுகம் நல்லதம்பி	வண். மேற்கு	22-2-19	பொன் கடுக்கன் 2	12 00
139	கார்த்திகேசர் சுப்பிரமணியபிள்ளை	வேலணை மேற்கு	22-2-19	கம்பி அட்டியல் 1	35 00
142	சுலைமான் அப்துல்காதர் முகம்மது சப்துல்காதர்	வண். மேற்கு	22-2-19	பட்டணம் காப்பு சோடி 1	50 00
232	அருணாசலம் செட்டியார் முருகவேலுசெட்டியார்	வண். கிழக்கு	26-4-19	புலிநகமலை 2 பவளமலை 1 சன்னமலை 1 உருப்படி 4	40 00
244	காசிப்பர் கதிர்வேலு	வண். கிழக்கு	1-5-18	செட்டிக்காப்புசோடி 1 தாயித்து சோடி 1	15 00

க. வேலுப்பிள்ளை,
மனேசர், யா. ஐ. லா. நி.

(31)

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors in the Saiva Prakasa Press, Jaffna.